சுருக்கம்

பொது நூலகத் துறை - தமிழ் நாடு புத்தகப் பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பணியாளர் நல வாரியம் அமைத்தல் — ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (கே2) துறை

அரசாணை (நிலை)எண்.206 நாள்.10.8.2009

படிக்கப்பட்டவை.

பொது நூலக இயக்குநர் கடிதம் ந.க.எண்.7997/அ1/2008, நாள்.15.5.2008, 15.12.2008 (ம) 29.6.2009.

-------

**ஆணை**

2008-09 ஆண்டைய நிதிநிலை அறிக்கையில் “நூலகங்கள்” என்ற தலைப்பில் கீழ்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது :-

“புத்தகப் பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மற்றும் அத்துறையில் பணிபுரிவோர் நலன் காத்திட அவர்களுக்கென தனி நல வாரியம் ஒன்றை இந்த அரசு அமைக்கும்”

2) மேற்கண்ட அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில் பொது நூலக இயக்குநரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு, விரிவாக பரிசீலனை செய்யப்பட்டது. இதனடிப்படையில் “தமிழ் நாடு புத்தகப் பதிப்பாளர், புத்தக விற்பனையாளர் மற்றும் பணியாளர் நலவாரியம்” எனும் புதிய அமைப்பு ஏற்படுத்தியும் அதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் கீழ்க்காணும் உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு குழு அமைத்தும் அரசு ஆணையிடுகிறது.

**தமிழ் நாடு புத்தகப் பதிப்பாளர், விற்பனையாளர் மற்றும் பணியாளர் நல வாரியக்குழு உறுப்பினர்கள்**

| வ. எண் | உறுப்பினர் | பதவி | பதிவு எண் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்** | | | | |
| 1. | பள்ளிக் கல்வித் துறை செயலாளர் | உறுப்பினர் | - | - |
| 2. | நிதித் துறைச் செயலாளர் | உறுப்பினர் | - | - |
| 3. | பொது நூலக இயக்குநர் | உறுப்பினர் | - | - |
| 4. | இணைப் பொது நூலக இயக்குநர் | உறுப்பினர்-செயலாளர் | - | - |
| **அலுவல் சாரா உறுப்பினர்கள்** | | | | |
| 5. | தலைவர்,<br>தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம்,<br>சென்னை-6. | உறுப்பினர் | 243 / 1986 | 360 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | மேற்படி சங்கத்தால் தேர்வு செய்யப்படும் தொழிலாளர் ஒருவர் | உறுப்பினர் | - | - |
| 7. | தலைவர்,<br>தமிழ் நூல் வெளியீட்டாளர் - விற்பனையாளர்கள் சங்கம் சென்னை-18. | உறுப்பினர் | 153 / 1990 | 165 |
| 8. | மேற்படி சங்கத்தால் தேர்வு செய்யப்படும் தொழிலாளர் ஒருவர் | உறுப்பினர் | - | - |
| 9. | தலைவர்,<br>தமிழக தமிழ் பதிப்பாளர் சங்கம் சென்னை-17. | உறுப்பினர் | 168 / 2008 | 69 |
| 10. | மேற்படி சங்கத்தால் தேர்வு செய்யப்படும் தொழிலாளர் ஒருவர் | உறுப்பினர் | - | - |
| 11. | தலைவர்,<br>பதிப்பாளர் மையம், சென்னை – 5. | உறுப்பினர் | 297 / 1998 | 90 |
| 12. | மேற்படி சங்கத்தால் தேர்வு செய்யப்படும் தொழிலாளர் ஒருவர் | உறுப்பினர் | - | - |

3) தமிழ் நாடு புத்தகப் பதிப்பாளர், புத்தக விற்பனையாளர் மற்றும் பணியாளர் நல வாரியத்தில் புத்தகப் பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர் மற்றும் அத்துறையில் பணிபுரியும் ஊழியர்கள் புத்தகப் பதிப்பின் துணைத் தொழில்களான நூல் கட்டுமானம் செய்பவர்கள், கணிப்பொறியில் DTP செய்பவர்கள், லேமினேஷன் செய்பவர்கள், நோட்டுப் புத்தகங்கள் கட்டுனர் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், ஆகியோர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவர் அச்சகத் தொழிலில் ஈடுபட்டோருக்கென தனி நலவாரியம் இருப்பதால் அவர்கள் இதில் இடம் பெறமாட்டார்கள். தவிர பிற நலவாரியத்தில் உறுப்பினராக இல்லாதவர்கள் மட்டுமே இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவார்கள். அவ்வாறு சேர்க்கப்பட்ட வாரிய உறுப்பினர்களுக்கு தமிழ் நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் சட்டம் 1982-ன் கீழ் வரும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நல உதவிகளும் வழங்கப்பட வேண்டும் என அரசு முடிவு செய்து நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் உதவித் தொகைகள் வழங்குவதற்கான வழிமுறைகள் குறித்து அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) உறுப்பினராக பதிவு செய்வதற்கான வழிமுறைகள் :-

அ) விண்ணப்ப படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து அளிக்க வேண்டும்.

ஆ) உறுப்பினர் தனது புகைப்படத்தை விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும். மற்றொரு புகைப்படத்தை விண்ணப்பத்துடன் அளிக்க வேண்டும்.

இ) உறுப்பினர் சம்பந்தப்பட்ட தொழிலில் வேலை செய்பவர் என்பதற்கான சான்று திட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஒருவரால் அளிக்கப்பட வேண்டும்.

ஈ) பதிவின்போது ஒரு முறை செலுத்தும் பங்களிப்புத் தொகையாக ரூ.100/- செலுத்த வேண்டும். இரண்டு வருடத்திற்கு ஒருமுறை புதுப்பித்தல் கட்டணமாக ரூ.50/-ம் செலுத்த வேண்டும்.

உ) பதிவு செய்துகொள்ளும் உறுப்பினர் 18 வயது நிறைவு செய்தவராகவும், 60 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(ii) நல வாரிய திட்டத்தின் கீழ் பின்வரும் உதவித் தொகைகள் வழங்கப்படும்

1. விபத்து காப்பீடு திட்டம்:

அ. விபத்து இறப்பு - ரூ.1,00,000/-

ஆ. விபத்து ஊனம் -

| | | |
|---|---|---|
| i) | இரண்டு கைகள் இழத்தல் அல்லது இரண்டு கால்கள் இழத்தல் அல்லது ஒரு கால் மற்றும் ஒரு கை இழத்தல் அல்லது இரண்டு கண்களிலும் பார்வை இழத்தல் | ரூ.1,00,000/- |
| ii) | ஒரு கால் இழத்தல் அல்லது ஒரு கை இழத்தல் அல்லது ஒரு கண் பார்வை இழத்தல் | ரூ. 50,000/- |
| iii) | மேலே (i) (ம) (ii)--ல் தெரிவிக்கப்பட்ட படியல்லாத இதர ஊனங்கள் | ரூ. 25,000/- |
| 2. | இயற்கை மரண உதவி | ரூ.15,000/- |
| 3. | ஈமச் சடங்கு | ரூ.2,000/- |

4. <u>கல்வி உதவித் தொகை</u>

| | |
|---|---|
| அ) 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ.1,000/- |
| ஆ) 10ம் வகுப்பு தேர்ச்சி | ரூ.1,000/- |
| இ) 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ.1,000/- |
| ஈ) 12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ.1,500/- |
| உ) 12ம் வகுப்பு தேர்ச்சி | ரூ.1,500/- |
| ஊ) முறையான பட்டப்படிப்பு | ரூ.1,500/- |
| விடுதியில் தங்கி படித்தால் | ரூ.1,750/- |

| | | |
|---|---|---|
| | எ) முறையான பட்ட மேற்படிப்பு | ரூ.2,000/- |
| | விடுதியில் தங்கி படித்தால் | ரூ.3,000/- |
| | ஏ) தொழில் நுட்ப பட்டப்படிப்பு | ரூ.2,000/- |
| | விடுதியில் தங்கி படித்தால் | ரூ.4,000/- |
| | ஐ) தொழில் நுட்ப பட்ட மேற்படிப்பு | ரூ.4,000/- |
| | விடுதியில் தங்கி படித்தால் | ரூ.6,000/- |
| | ஒ) ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | ரூ.1,000/- |
| | விடுதியில் தங்கி படித்தால் | ரூ.1,200/- |
| 5. | திருமண உதவி | ரூ.2,000/- |
| 6. | மகப்பேறு உதவி (பெண் உறுப்பினர்களுக்கு மட்டும்) | ரூ.6,000/- |
| 7. | கண் கண்ணாடி வாங்கிட உதவி | ரூ.500/- |
| 8. | ஓய்வூதியம் மாதத்திற்கு | ரூ.400/- |

4) தமிழ் நாடு புத்தகப் பதிப்பாளர், புத்தக விற்பனையாளர் மற்றும் பணியாளர் நலவாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்காகவும், பிற பணிகளை மேற்கொள்வதற்காகவும் தமிழ் நாடு புத்தகப் பதிப்பாளர், புத்தக விற்பனையாளர் மற்றும் பணியாளர் நலவாரியத்திற்கு ரூ.50,00,000/-(ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) அனுமதித்து ஆணையிடப்படுகின்றது. தமிழ் நாடு புத்தகப் பதிப்பாளர், புத்தக விற்பனையாளர் மற்றும் பணியாளர் நலவாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவித் திட்டங்களுக்கான நிதியினை தேவைக்கேற்ப மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்ய பொது நூலக இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

5) மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்பட வேண்டும்.

> "2205 – 00 – கலையும் பண்பாடும் 105 - பொது நூலகங்கள் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II – மாநிலத்திட்டம் JM – புத்தக வெளியீட்டாளர்கள் விற்பனையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியத்திற்கு நிதியுதவி 09 – உதவித் தொகை 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை."
> (ததொகு 2205 – 00 – 105 – JM – 0933)

6) மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் தமிழ் நாடு புத்தகப் பதிப்பாளர், புத்தக விற்பனையாளர் மற்றும் பணியாளர் நலவாரியத்திற்கு பணமாக

வழங்கப்படாமல் இவ்வாரியத்தின் உறுப்பினர் செயலர் பெயரிலான கீழ்க்காணும் தன்வைப்புக் கணக்கில் காசோலை / வரைவோலை மூலம் வரவு வைக்கப்பட வேண்டும்.

"K வைப்பீடுகள், முன் பணங்கள் (6) வட்டிப்பெறா வைப்பீடுகள் – 8443 – 00 – உரிமையியல் வைப்பீடுகள் – 800 – ஏனைய வைப்பீடுகள் – DS புத்தக வெளியீட்டாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் வைப்பீடுகள்.
(ததொகு. 8443 00 800 DS 000G) (வரவுகள்)

7) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.42622/கல்வி-I, நாள்.5.8.2009-ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ம.குற்றாலிங்கம்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
பொது நூலக இயக்குநர், சென்னை-2.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
தமிழ் நாடு புத்தகப் பதிப்பாளர்,
புத்தக விற்பனையாளர் மற்றும் பணியாளர்
நலவாரியத்தின் தலைவர், துணைத் தலைவர்
மற்றும் அனைத்து அலுவல் சாரா உறுப்பினர்கள்
(தமிழ் நாடு புத்தகப் பதிப்பாளர், புத்தக விற்பனையாளர் மற்றும் பணியாளர்
நலவாரிய உறுப்பினர்-செயலர் வழியாக)
அனைத்து மாவட்ட பொது நூலக அலுவலர்கள்.
அரசு செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
மாநில கணக்காயர், சென்னை-18/35.
சம்பள கணக்கு அலுவலர், (தெற்கு), சென்னை-35.
மாவட்ட கருவூல அலுவலர்கள்,
கணக்கு மற்றும் கருவூல இயக்குநர், சென்னை-15.

**நகல்**
நிதி (வரவு-செலவு பொது I.II) (கல்வி-II) துறை, சென்னை-9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை-9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை-9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வி துறையின் அனைத்துப் பிரிவுகள்
பள்ளிக் கல்வி துறையின் Assistant Programmer, ( web-site- ல் வெளியிட)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.